**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 67/2020 |
| Name | : Kannan |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாள் புதுாரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் 1ம் எதிரி எனது அண்ணன் ஆஜர் 2ம் எதிரி எனது அண்ணி. 03.11.2019ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு பொன்னிகட்டுத்துறைக்கு செல்லும் சாலையில் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட நிலத்தில் அவரது இறப்பிற்கு பிறகு அவரது நான்கு மகன்கள் நாங்கள் சரியாக அளக்காமல் பிரித்து விவசாயம் செய்து வந்தோம். எனக்கு 5 ஏக்கருக்கு பதிலாக 4 ½ ஏக்கர் இருந்தது. மீதி ½ ஏக்கரை தருமாறு எனது அண்ணன் குமரவேலிடம் கேட்டேன். எனது அண்ணி கையில் வைத்திருந்த மிளகாய் துாளை எனது இடது கண்ணில் போட்டார் . எனது அண்ணன் அருகில் இருந்து கட்டையை எடுத்து எனது இடது தோளிலும், இடது பக்க காதிற்கு மேல் தலையிலும் அடித்தார் எனக்கு மண்டை உடைந்தது. அடிக்கும் போது என்னை தகாத முறையில் தாயோழி மகனே என்று சொல்லி திட்டினார்கள். எனது அண்ணன் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். நான் எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியை அழைத்துக்கொண்டு உடுமலைப்பேட்டை அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். நான் 3 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 67/2020 |
| Name | : Saroja |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாள் புதூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் 1ம் எதிரி எனது கணவரின் அண்ணன் ஆஜர் 2ம் எதிரி எனது கணவரின் அண்ணி. எங்களுக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே பூமி சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. பூமியை அளந்து பார்த்த போது எங்களுக்கு ½ ஏக்கர் கம்மியாக இருந்தது அதை கேட்க எனது கணவர் சென்றிருந்தார். அப்போது எதிரிகள் அவரை கண்ணில் மிளகாய் பொடி போட்டு மண்டையை உடைத்தார்கள். எனது கணவர் வீட்டிற்கு வந்த உடன் நாங்கள் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

| |
|---|
| இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..<br>Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்<br>மடத்துக்குளம் |